இது உயர்வா இல்லை குறைவா? நீங்களே சொல்லுங்க மக்களே!

தி.மு.க. ஐ.டி. விங் கேள்வி!

திராவிட மாடல் ஆட்சியில்!

ஏற்கனவே ரூ.8,000 ஆக உள்ள மீன்பிடி தடைக்கால நிவாரணத்தை, ரூ.7,000 ஆக அறிவிப்பது, உயர்வா இல்லை குறைவா?

த.வெ.க. ஆட்சியில்!

முத்தமிழறிஞர் கலைஞர் 8ஆம் ஆண்டு நினைவு நாள்!

திண்டுக்கல் கலைஞர் மாளிகையில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை!

மாவட்டக் கழகச் செயலாளர்கள் அர.சக்கரபாணி – ஐ.பி.செந்தில்குமார் வேண்டுகோள்!

திண்டுக்கல், ஆக.6- திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் அர.சக்கரபாணி எம்.எல்.ஏ., கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி. செந்தில்குமார் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் அரசியல் வரலாறு, அரசியல் களம், சட்டமன்ற ஜனநாயகம் ஆகிய அனைத்திலும் மகத்தான சாதனைகள் படைத்து பன்முக ஆற்றலை தன்னகத்தே பெற்றிருந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தமிழ்நாட்டு மக்கள் நினைவில் என்றும் நிலைகொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தொடர்ந்து 13 முறை சட்டமன்ற உறுப்பினராகவும் 5 முறை முதலமைச்சராகவும் இருந்தவர். அவரது வழியில் தந்தை பெரியார் அவர்களுடைய சமூக நீதி கொள்கைக்கும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய உயர்ந்த ஜனநாயக கோட்பாடுகளுக்கும் சட்ட வடிவம் கொடுத்தவரும், நமது

கழக ஆட்சியில் தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றியவருமான கழகத் தலைவர், முன்னாள் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை கொடுத்த தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 07.08.2026, வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில், திண்டுக்கல், கலைஞர் மாளிகையில் வைக்கப்பட்டுள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை, வார்டு செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள் இன்னாள் உள்ளாட்சிமன்றப் பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் என அனைவரும் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் முத்தமிழின் முகவரியாக, புகழ்ச் சின்னமாக ஒளிவீசும் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளினையொட்டி 07.08.2026, வெள்ளிக்கிழமை அன்று திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்டங்களில் உள்ள அனைத்து மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழகங்கள், வார்டு மற்றும் கிளைக் கழகங்கள் தோறும் அனைத்து இடங்களிலும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செய்து வீரவணக்கம் செய்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் அர.சக்கரபாணி. ஐ.பி. செந்தில்குமார் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பங்கேற்பு! முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள்!

துறைமுகம் 59 'அ' வட்டத்தில் 500 நபர்களுக்கு காலை சிற்றுண்டி!

வட்டச் செயலாளர் வே.பா.பிரபாகரன் வேண்டுகோள்!

சென்னை, ஆக.6- துறைமுகம் 59 'அ' வட்டச் செயலாளர் வே.பா.பிரபாகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க மாவட்டக் கழக செயலாளர் பி.கே. சேகர்பாபு ஆலோசனையின்படி சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்குப் பகுதி, 59 'அ' வட்ட திமுக சார்பில் வட்டக் கழக செயலாளர் சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன் தலைமையில், பகுதிக் கழக செயலாளர் எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர் முன்னிலையில் தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர், செம்மொழி நாயகர், கலைஞர் அவர்களின் 8-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாளை (07.08.2026 -வெள்ளிக்கிழமை) காலை 9.30 மணிக்கு வட்டக் கழக அலுவலகத்தில் உள்ள தலைவர் கலைஞரின் திருஉருவச் சிலைக்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.

இந்நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக ஏழை எளிய 500 நபர்களுக்கு காலை சிற்றுண்டி உணவை தன் திருக்கரங்களால் முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழங்குகிறார்.

நிகழ்ச்சியில் மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகளும், அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்களும் மற்றும் துணை அமைப்பாளர்களும், பாகநிலை முகவர்களும் (BLA2,BDA,BYO), பாக நிலை உறுப்பினர்களும், வெல்லும் தமிழ் பெண்கள் குழுக்களும் ,கழக மூத்த முன்னோடிகளும் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

சென்னை மாவட்டக் கழகம் நடத்தும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் அமைதிப் பேரணியில் (07.08.2026 காலை 7.30 மணிக்கு) அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டும், அதைத்தொடர்ந்து வட்டக் கழகம் நடத்தும் நிகழ்ச்சியிலும் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சைதை கிழக்கு பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சிகள்!

சைதை கிழக்கு பகுதி செயலாளர் இரா.துரைராஜ் அறிக்கை!

சென்னை,ஆ க.8- கழக தலைவர் முன்னாள் முதலமைச்சர் அவர்களின் வழியில், மேனாள் அமைச்சர், சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி, சைதை கிழக்கு பகுதிக்கு உட்பட்ட நிர்வாகிகளுக்கு பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு-

07.08.2026 வெள்ளிக்கிழமை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி பின்வரும் நிகழ்ச்சிகளில் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அன்று காலை 8 மணியளவில் நமது கழக தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள அமைதி பேரணியில் கலந்து கொள்ள வேண்டும்!

நமது சைதை கிழக்கு பகுதிக்கு உட்பட்ட அனைத்து வட்டங்களிலும், பாகங்கள் வாரியாக, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு அஞ்சலி செலுத்த வேண்டும்! தலைவர் கலைஞர் அவர்களின் புகைப்படம் தேவை படும் நிர்வாகிகள் தங்களின் வட்ட செயலாளர்களிடம் பெற்று கொள்ள வேண்டும்.

அன்று மாலை 6 மணிக்கு சைதாப்பேட்டையில் உள்ள அன்னை வேளாங்கண்ணி கல்லூரி வளாகத்தில் வட்டக் கழக செயலாளர் - மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார்.எம்சி அவர்கள் தலைமையில் கவிச்சுடர் கவிதைப்பித்தன், கவிஞர்கள் நெல்லைஜெயந்தா, வி.ம.இளங்கோவன், ஆண்டாள் பிரிதர்சினி, இளையகம்பன், வல்லம் தாஜ்பால் ஆகியோர் கவிபாடும் கவியரங்க நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டும்!

இவ்வாறு சைதை கிழக்கு பகுதி செயலாளர் இரா.துரைராஜ் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

அய்யா கலைஞரே உன் நினைவுகள் !



கூடு கட்டி வாழ்ந்தப் பறவைகள் கூடி
அழுகிறது
மரமே நீ சாய்ந்த நாள் !

மழைமேகம் கண்கலங்கிட ஆகாயமே
நீ புதைந்த நாள் !

ஒரு பக்கம்தலைவா எழுந்துவா
என்றமுழக்கம் !
ஒரு பக்கம் தலைவரே என்று
கதறிஅழுதிடும் சத்தம் !

உன் இறப்பிற்குப் பின்
போர்க்களம்நடக்கிறது
உன் உடலில்இருந்தே தோட்டாக்களை
எடுக்கிறது எங்கள்துப்பாக்கி !

தலைவர் ஸ்டாலினோ
உனக்கு
கல்லறைக் குழிக் கேட்ட
களத்தில்புதைத்து
காட்டினார், எதிரிகள் கணக்கைத்தப்பாக்கி !

உன் மீது வீசிய கல்
அதைச் சிற்பமாக வடித்தாய் !
உன்மீதுவீசிய சொல்
அதைக் கவிதைப் படித்தாய் !

உன் மீது வீசிய கத்தி புகழ்க் கண்டது !
உன் சிலை உடைத்த
கடப்பாரை கூட வரலாற்றில்நின்றது !

நீ கடைசியாக
அமர்ந்து எழுந்த
முரசொலி நாற்காலிக்கு !
முதலமைச்சர்
நாற்காலிக்கு
உன் நினைவுகள்!

நீ கடைசியாக அமர்ந்து எழுந்த
அறிவாலயம் நாற்காலிக்கு !
உன்னைத்தாங்கிய
சக்கரநாற்காலிக்கு
உன் நினைவுகள்!

நீ கடைசியாக தொட்ட
எழுதுகோலுக்கும் !
அண்ணா
என்றவரிகள் தாங்கியதாளுக்கும்
உன் நினைவுகள்!

நீ மத்திய சிறை
வாசலில் அமர்ந்தது !
அங்கே
அநீதி வீழும்
அறம் வெல்லும் என்று எழுதிய வரிகளுக்கு
உன் நினைவுகள்!

வெண் மயில் நிறத்தில்
தோளில் துண்டாடும் !
விரல் எழுதும் தமிழால் பகையோ
துண்டாகும் !

போராளிகள்
உருவாகிறார்கள்
உன் கடிதம் படித்தால் !

போர்க் களம் வெல்கிறார்கள்
நீ தரும் கொடியைப்
பிடித்தால் !

நீ மண மக்களை
வாழ்த்தியமேடை !
நீ போராட்டத் தேதி
அறிவித்த மேடை !

உன் கவியரங்கமேடை !
உன் கருத்தரங்கமேடை !
நீ
மு.கருணாநிதி எனும் நான் என்ற மேடை !
அனைத்திற்கும்
கண்ணீர் ஓடை !

அமிலம் கொடுத்தவருக்கும்
அமுதம் கொடுத்தவன் நீ !

வசந்தம் வசீகரிக்கும்
பேச்சின்பேரரசர் நீ !

தலை முடி நெளிநெளியாக
பிறகு வழுக்கையாக இருந்தபோதும்
நீ அழகு கூடம் !

தலைவா
திரைக் கூடம்
வணங்கிய நீ
கலைக் கூடம் !

உன் முரசொலி
இனத்திற்கு
பாடம் எடுக்கும்
பள்ளிக்கூடம் !

போராட்டமாக
பிறந்து
போராட்டமாக
இறந்த
போராட்டம் நீ

செங் களம்
பலமுறை வென்ற
வெண்கலம் நீ

கோபாலபுரத்தை
இதயம் பூசுகிறது
உன் உடல் பட்ட இடம் அல்லவா !

செருப்போடு நடக்க கால்கள் கூசுகிறது
அறிவாலயம்
உன் பாதம் பட்ட இடம் அல்லவா !

பத்திரமாக இருக்கிறது
பொங்கலுக்கு அது
உன் கைத்தொட்டு தந்த நோட்டு அல்லவா
!

நீ எழுதிய
சங்க தமிழுக்கு
நினைவுகள் உன்
குறளோவியம் பற்றி !

தென்பாண்டி சிங்கத்திற்கு
நினைவுகள் உன்
பொன்னர் சங்கர் பற்றி !

பாயும் புலி பண்டாரகவன்னியனுக்கு
நினைவுகள்
உன்
ரோமாபுரி பாண்டியன் பற்றி !

வள்ளுவர்
கோட்டத்திற்கு
நினைவுகள் உன்
பூம்புகார் பற்றி !

குமரி வள்ளுவர் சிலைக்கு
நினைவுகள் உன்
கட்டபொம்மன் கோட்டையைப் பற்றி !

கணினி பூங்காவிற்கு நினைவுகள் உன்
அண்ணா நூற்றாண்டு நூலகம் பற்றி !

புகைவண்டி
தண்டவாளம்
தமிழ்ப் படித்தது
கல்லக்குடியில்
நீ தலை வைத்த போது !

தமிழ் அல்லவா இருந்தது என்றது
பாளைச் சிறை நீ தனிமையில் இருந்தபோது !

நெருப்பை குடித்துவிட்டு எரிமலையாகச்
சுழன்றவனே !
சூறாவளியைக் குடித்துவிட்டு புயலை
உமிழ்ந்தவனே !

மெல்ல மெல்ல
காவேரி மருத்துவமனையை
மதியம் போல காவல்துறை வளைத்தது !

மெல்ல மெல்ல
செய்திக் கசிய
உடன்பிறந்தவர்கள் கதறிக்கதறி அழுதது !

தலைவர்
முக.ஸ்டாலின் அவர்கள்
உன்உடலில்போர்த்த
அன்பகம் கலை
தைத்து எடுத்து வந்தக்
கொடியோடு
காத்திருத்தது !
அழுதது !

பத்திரமாக வீடு செல்லுங்கள் என உன்
குரலோடுமுடியும்
ஊர்வலம் !

நீ மட்டுமே வீடு திரும்பாமல் முடிந்தது உன்
இறுதி ஊர்வலம் !

ஈரோடு இறைவன்
இணைச் செயலாளர்
தி.மு.க.
இலக்கிய அணி